பொது விநியோகத் திட்டத்தில் மானிய விலையில் பொருட்கள் வழங்குவதற்காக

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.10,500 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்!

## உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!



திண்டுக்கல், ஆக. 31 -
திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை தொடங்கி வைத்து, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அமைச்சர் சக்கரபாணி, அடிக்கல் நாட்டினார். மாவட்ட ஆட்சித் தலைவர் மா நா பூங்கொடி தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழக அரசு விவசாயிகள் நலம் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. வேளாண்மைத் துறையை உழவர் நலத்துறையாக மாற்றி பல்வேறு திட்டங்களை செயல்படுத்திய பெருமை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையே சாரும். இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில்தான் வேளாண் துறைக்கு என தனி நிதி நிலை அறிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறையின் மூலம் பொதுமக்களுக்கு எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பிற்படுத்தப்பட்டோர், மிகவும்பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர், சிறு பான்மையினர், கைம்பெண்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் ஆகியோர் தங்களது வாழ்வில் மேம்பாடு அடையும் பொருட்டு வட்டியில்லாமல் மற்றும் குறைந்த அளவிலான வட்டியில் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு தரமான உணவுப்பொருட்கள், தட்டுப்பாடு இன்றி, நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்பதற்காக நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. பொதுவிநியோக திட்டத்தில் மானிய விலையில் பொருட்கள் வழங்குவதற்காக கடந்த ஆண்டு ரூ.7,500 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ.10,500 கோடி நிதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அதிகம் பயனடையும் வகையில் பயிர்க்கடன் தள்ளுபடி திட்டம் செயல்படுத்தப்பட்டு, 45,145 பயனாளிகளுக்கு ரூ.525.90 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நகைக்கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ் 53,899 பயனாளிகளுக்கு ரூ.193.77 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக்குழு கடன் திட்டத்தின் கீழ் 3,793 குழுக்களைச் சார்ந்த 34,833 நபர்களுக்கு ரூ.87.66 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

2023-2024ஆம் நிதியாண்டில் கூட்டுறவுத்துறையின் மூலம் பயிர்க்கடன் 57,716 உறுப்பினர்களுக்கு ரூ.832.47 கோடி அளவிற்கும், மகளிர் சுய உதவிக்குழு கடன் திட்டத்தின் கீழ் 3356 குழுக்களில் உள்ள 34,422 உறுப்பினர்களுக்கு ரூ.166.78 கோடி கடனும், 625 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.274.05 இலட்சம் கடனுதவியும், ஆதிதிராவிடர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த 292 நபர்களுக்கு ரூ.165.00 இலட்சம் தாட்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, சிறுதொழில் செய்ய குறைந்த வட்டியில் 1516 நபர்களுக்கு ரூ.997.00 இலட்சம் டாம்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, சிறு தொழில் செய்ய குறைந்த வட்டியில் 1478 நபர்களுக்கு ரூ.1224.00 இலட்சம் டாப்செட்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் கூட்டுறவுத்துறையின் மூலம் பயிர்க்கடன் 11,093 உறுப்பினர்களுக்கு ரூ.167.84 கோடி அளவிற்கும், மகளிர்சுயஉதவிக்குழு கடன் திட்டத்தின் கீழ், 682 குழுக்களில் உள்ள 6,922 உறுப்பினர்களுக்கு ரூ.148.13 கோடி கடனும், 216 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.869.00 இலட்சம் கடனும், ஆதிதிராவிடர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, 47 நபர்களுக்கு ரூ.3.96 இலட்சம் தாட்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, சிறுதொழில் செய்ய குறைந்த வட்டியில் 191 நபர்களுக்கு ரூ.35.04 இலட்சம் டாம்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்ப ட்டோர் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, சிறு தொழில் செய்ய குறைந்த வட்டியில் 88 நபர்களுக்கு ரூ.6.11 இலட்சம் டாப்செட்கோ கடன் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் பகுதியிலேயே குடிமைப்பொருட்கள் பெற ஏதுவாக புதியதாக 50 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 130 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் என ஆகமொத்தம் 180 நியாயவிலைக் கடைகள் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில், 48 முழுநேர நியாயவிலைக் கடைகளும் 126 பகுதிநேர நியாயவிலைக்கடைகளும் என ஆகமொத்தம் 174 நியாயவிலைக்கடைகள் புதிதாக திறக்கப்ப ட்டுள்ளன.

திண்டுக்கல் மண்டலத்தில் 33 நியாயவிலைக் கடைகள் ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் பெற்றுள்ளது.

இன்றையதினம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் வாகரை, கொழுமங்கொண்டான், தாளையூத்து மற்றும் கீரனூர் பேரூராட்சி ஆகிய இடங்களில் புதிய தொடங்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. தாளையூத்து ஊராட்சி, சப்பளநாயக்கன்பட்டியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக்கூடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், தும்பலப்பட்டி ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டடத்தை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன மயமாக்கும் பணிகள், கரியாம்பட்டி, தொப்பம்பட்டி, மானூர் ஆகிய ஊராட்சிகளில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் சீரிய திட்டங்களை தமிழக மக்களுக்கு கொண்டு செல்லும் கூட்டுறவுத்துறையின் மூலம் அதிக மக்கள் பயன்பெற்று தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும், என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் பொன்ராஜ், பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் காந்திநாதன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சுபாஷினி, மாவட்ட வழங்கல் அலுவலர் ஜெயசித்ரகலா, அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.08.2024) சென்னையில், உடல் நலக்குறைவால் காலமான செய்தி – மக்கள் தொடர்புத் துறையில் இணை இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இணை இயக்குநர் எல்.மணிமாறன் அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

செய்தி - மக்கள் தொடர்புத்துறையின் முன்னாள் இணை இயக்குநர்

# எல். மணிமாறன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஆக. 31 -**
**செய்தி மக்கள் தொடர்புத் துறையின் முன்னாள் இணை இயக்குநர் எல். மணிமாறன் அவர்கள் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவரது மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.**

அது வருமாறு:

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் முன்னாள் இணை இயக்குநரும் எனது உறவினருமான எல்.மணிமாறன் அவர்களது திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அவரது அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் – செய்திமக்கள் தொடர்பு துறையில் பல்வேறு பொறுப்புகளிலும் திறம்படப் பணியாற்றியவர்.

அவரது மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும் – அவருடன் பணியாற்றிய சக செய்தி மக்கள் தொடர்புத்துறை பணியாளர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தெற்கு ஒன்றியம் சார்பாக பொது உறுப்பினர்கள் கூட்டம் சரவண குமார் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார் . உடன் மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன், செயற்குழு உறுப்பினர்கள் முல்லை சேகர், முருகேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் கண்ணையன், முனியம்மாள், முனியாண்டி, பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தலைவர் தங்கவேல் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்,

## ஃபார்முலா-4 கார் பந்தயம் நடத்தத் தடையில்லை!

சென்னை, ஆக. 31–
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தனியார் அமைப்பு சார்பில் சென்னையில் ஃபார்முலா–4 ஸ்ட்ரீட் கார் பந்தயம் ஆக.31 மற்றும் செப்.1 ஆகிய தேதிகளில் தீவுத்திடலை சுற்றிலும் உள்ள வட்ட வடிவ சாலையில் நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து ஆயத்த ஏற்பாடுகளும் இரவு, பகலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த கார் பந்தயத்துக்கு தடை கோரி பா.ஜ.க. செய்தித் தொடர்பாளரான ஏ.என்.எஸ்.பிரசாத் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை பொறுப்பு தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார் மற்றும் நீதிபதி பி.பி.பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள், இந்த கார் பந்தயம் தொடர்பாக ஏற்கெனவே உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தியது குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய தமிழ்நாடு அரசுக்கு உத்தர விட்டு விசாரணையை தள்ளி வைத்திருந்தனர்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் ஆஜராகி, “இந்த கார் பந்தயத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது, எனக் கூறி தமிழ்நாடு அரசின் அறிக்கையை தாக்கல் செய்தார். இதையடுத்து நீதிபதிகள், வழக்கின் தீர்ப்பை வியாழக்கிழமை மாலைக்கு தள்ளி வைத்திருந்தனர்.

### தடை இல்லை

இதைத் தொடர்ந்து நீதிபதிகள் பிறப்பித்த இடைக்கால உத்தரவில், ‘சென்னையில் ஃபார்முலா–4 கார் பந்தயம் நடத்த அனுமதியளிக்கப்படுகிறது. கார் பந்தயம் நடத்த தடை விதிக்க முடியாது. எஃப்ஐஏ எனும் சர்வதேச கூட்டமைப்பு உரிமத்தைப் பெற்று பந்தயத்தை நடத்த வேண்டும். இந்த பந்தயம் நடத்தப்படுவதால் மருத்துவமனை மற்றும் ரயில் நிலையங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் யாருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் கார் பந்தயத்தை நடத்துவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும்’ என்றனர். மேலும், பிரதான வழக்கில் தமிழ்நாடு அரசு 6 வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு, வழக்கின் விசாரணையை 6 வாரங்களுக்கு தள்ளி வைத்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம் –

# குளச்சல் பகுதியில் ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!’

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திடீர் ஆய்வு!

கன்னியாகுமரி, ஆக. 31 -
கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் பகுதியில் அமைந்துள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் நேற்று (30.08.2024) பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முதலமைச்சரின் காலை உணவு திட்டம் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தெரிவிக்கையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித் துறை சார்பில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு எண்ணற்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறது. அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அர்பணிப்புடன் பணியாற்றும் ஆசிரியர்கள் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக 234/77 ஆய்வுத்திட்டத்தின் கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, எண்ணும் எழுத்து வகுப்பறை, பயன்பாடில்லாத கட்டடங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பழுதடைந்த கட்டிடங்களை சீர் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் உணவு உட்கொள்ளும் மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கருங்கல் அரசு மேல்நிலைப் பள்ளியில் கழிப்பறைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு மாணவர்களின் திறமைகளை பாராட்டி, ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டது. மேலும் அப்பள்ளியில் நடைபெற்ற நன்னெறி வகுப்பில் மாணவர்களோடு அமர்ந்து மாணவர்கள் சொல்லிய நன்னெறி கதைகள் கேட்கப்பட்டது.

மேலும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளியில் மொழி சிறுபான்மையினர் அதிகம் வசிப்பதால் இப்பள்ளியில் மலையாள வழிக்கல்வி முறையிலும் பயிற்றுவிக்கப்படுகின்றது. மலையாள வகுப்பறையில் அமர்ந்து கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளைப் பார்வையிட்டதோடு, அதே பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அரசு தொடக்கப் பள்ளி ஆய்வு மேற்கொண்டு, ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகளையும் கேட்டறியப்பட்டது. இவ்வாறு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் துறை அலுவலர்கள், தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை மாவட்டம் – காளையார் கோயில் கிழக்கு ஒன்றியம்

# வே.ஆரோக்கியசாமி தந்தை வேதமுத்து மறைவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை. ஆக. 31-
சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் முன்னாள் பெருந்தலைவரின் தந்தை வேதமுத்து உடையார் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் வே. ஆரோக்கிய சாமி தந்தை வேத முத்து உடையார் (வயது 88) நேற்று முன்தினம் 29ம்தேதி பிற்பகல் மரணம் அடைந்தார். தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவருக்கு ஒரு மகன், நான்கு மகள்கள் உள்ளார்கள்.

மறைந்த வேத முத்து வின் உடலுக்கு கூட்டுறவுத் துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கே.ஆர்.பெரியகருப்பன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட கழக துணை செயலாளர் த. சேங்கை மாறன், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.எம்.கென்னடி,யோக.கிருஸ்ண குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.சேதுபதி ராஜா, எஸ்.எம்.மதிவாணன் ,கே. எம். பொற்கோ மற்றும் ஒன்றிய நகரக் கழக செயலாளர்கள் கட்சியினர் அனைத்து கட்சி பிரமுகர் கள் அஞ்சலி செலுத்தினார்கள் நேற்று பிற்பகல் வேத முத்து வின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.



தேனி தெற்கு மாவட்ட ஆண்டிபட்டி மேற்கு,கிழக்கு ஒன்றியம் மற்றும் பேரூர் திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் தனியார் மண்டபத்தில் தேனி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் மகாராஜன் எம்.எல். ஏ முன்னிலையில் நடைபெற்றது. இதில் முன்னாள் எம்.எல்.ஏ. ஆசையன், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் ராமசாமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர் சரவணன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.வி.எம்.அ. பொன்மொழி
### ஆகஸ்ட் 31 (2017)



பள்ளிப்பருவமாகிய 1965–ல் தான் பயின்ற பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டி, இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி முதல் அமைப்பாளர், மாவட்ட மாநாட்டு தொண்டர் படைத் தலைவர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி தலைவராகவும், கலைஞர் பட்டுக் கூட்டுறவு சங்க இயக்குநராகவும், திருவள்ளூர் பட்டுக் கூட்டுறவு சங்க தலைவராகவும் பொறுப்பேற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“இவரின் நலப்பணிகள் என்றென்றும் மக்கள் மனதில் வீற்றிருக்கும். அவர் விட்டுச் சென்ற கழக பணிகள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொண்டரின் உள்ளத்திலும் குடியிருக்கும்” என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.